# புண்ணியம் செய்வார்க்கு பூ உள!

**தமிழ்நாடு அரசின் சார்பில் வெளிவரும் ‘தமிழரசு’ இதழ், ஆளுமைகளின் பார்வையில் - “மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள்” என்ற தலைப்பில் கடந்த ஐந்தாண்டுகளில் ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளைத் தொகுத்து மலர் ஒன்றை வெளியிட்டுள்ளது.**

**இம்மலரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர்களின் துறைகளில் ஐந்தாண்டு சாதனைகளை தொகுத்து வெளியிட்டுள்ளது.**

**மேலும் மலரில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளைப் பற்றி சிந்தனைத் திறனுடன் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.**

**இக்கட்டுரைகளை எடுத்து வெளியிடுவதில் ‘முரசொலி’ பெருமை கொள்கிறது.**

**அதனடிப்படையில் எழுத்தாளர் - இயக்குனர் ஸ்ரீராம் சர்மா, “புண்ணியம் செய்வார்க்கு பூ உள!” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

“ஒன்றே குலம்; ஒருவனே தேவன்” எனும் தத்துவத்தை திராவிடக் கோட்பாடாய் நம்மிடையே விதைத்தவர் பேரறிஞர் அண்ணா. அதனை வழிமொழிந்து ஆண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரது வழியொற்றி ஆள்பவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

நமது முதல்வர் கைக்கொண்ட திராவிட மாடலின் மூலம் எதுவெனில், ‘தமிழ் ஆகம நூல் எனப் போற்றப்படும் ‘திருமந்திரம்’ ஆகும். ஆம், அந்தப் பொக்கிஷத்தின் 2,104ஆம் வரியில் இருந்துதான் அந்தத் தங்கக் கோட்பாடு கிளர்ந்தது!

அந்தத் திருமந்திரத்தை உலகுக்கு ஓதி அருளியவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும், பதினெண் சித்தர்களில் ஒருவருமான திருமூலர் ஆவார்!

சைவத் திருமுறை பனிரெண்டினுள் பத்தாம் திருமுறையான திருமூலர் அருளிய அந்த திருமந்திரத்தில் ‘சிவ பூஜை’ எனப்படும் அதன் ஏழாம் திருமந்திரப் பாடலதன் முதல் வரியானது...

**“புண்ணியம் செய்வார்க்கு, பூ உள; நீர் உள”**

என விதந்தோதுகின்றது. பூ எனில் நிலம் எனக் கொள்ளலாம்! நீர் எனில் உயிராதாரமாகும்! அதன் விரிபொருளாவது ‘மக்களுக்கான நன்மைகளை எண்ணிச் செய்வதே புண்ணியமாகும். அப்படிப்பட்ட புண்ணியத்தை செய்பவருக்கு இந்த நிலத்தை ஆளும் வரம் கிடைக்கும்’ எனலாம்!

அப்படிப்பட்ட வரம் இன்றைய திராவிட மாடல் அரசாங்கத்துக்குக் கிடைத்துவிட்டதா? எனில், ஆம்! அந்தப் புண்ணியம் இந்த ஆட்சிக்கு உண்டா எனில் உண்டு!

**நாடு விடுதலை கொண்ட அந்த நாளில்...**

**பீ.இரா.அம்பேத்கர், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், சையது முகமது சாதுல்லா உள்ளிட்ட வல்லோரால் அமைக்கப்பட்ட இந்திய அரசியல் அமைப்பும் அதன் வழியே இயற்றப்பட்ட சட்டங்களும் சாதி சமய பொல்லாப்புக்கு அப்பாலானது ஆகும்!**

**அதனை சமூகநீதி வழியே செலுத்தும் கடமையினைக் கொண்டதொரு மாபெரும் மாநிலமாக இதுகாறும் திகழ்ந்து வந்திருக்கின்றது நம் தமிழ்நாடு!**

**அதன் இன்றைய மாண்புமிகு முதலைமைச்சராம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கோ அது தன் ஆணி வேரை கௌரவிக்கும் வேட்கையாகிறது.**

**இந்தியாவிலேயே மிகப் பெரும் கட்டுமான அமைப்புடையதாகிய தமிழ் நாட்டின் அறநிலையத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கோ அது முதற் கடமையாகிறது.**

**அப்படியாக கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அறநிலையத்துறை கோயில்களுக்கும் பக்தர்களுக்கும் தமிழ் மண்ணுக்கும் செய்த சாதனைகளை அறத்துப்பால் எழுதி அருளிய திருவள்ளுவப் பேராசானின் திருக்குறளோடும், வேதங்களோடும், ஔவையார், அருட்பிரகாச வள்ளலார், மகாகவி பாரதியோடும் பொருத்திப் பார்க்க விழைகிறேன்!**

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்!**

அதிகாரம் 1 கடவுள் வாழ்த்து, குறள் 3



12 வருடங்களுக்கு ஒருமுறை நிகழ்த்தப்படும் திருக்குடமுழுக்கு என்பது சைவ ஆகமத்தில் ஆழ வலியுறுத்தப்பட்டதாகும். கோயில்களைப் புனரமைப்பதன் மூலம் கட்டிடக் கலையைப் பாதுகாத்தல், ஆகம விதிகளின்படி நிகழ்த்தப்படும் பூஜை புனஸ்காரங்களின் மூலம் இறைச் சக்தியை மீண்டும் கோயில்களுக்குள் பாய்ச்சுதல், விழாக்களின் வழியே சமூக ஒன்றிணைப்பை உண்டாக்குதல் ஆகியன திருக்குடமுழுக்கின் அடிப்படைச் சிறப்புகளாகும்.

சோழ காலம் தொட்டு நிகழும் அத்தகைய பெருஞ்சிறப்புக்களை சீருடன் நிகழ்த்திவருகிறது திராவிட மாடல் அரசாங்கம். கடந்த 01.12.2025 அன்று பத்திரிக்கையாளரிடம் பேசிய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், “இந்த தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுவரை 3,896 திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளன. ஜனவரி மாதத்தில் இதன் எண்ணிக்கை நான்கு ஆயிரத்தைக் கடந்துவிடும்” என்றார்.

12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் ரூ.5,500 கோடிக்கும் மேற்பட்ட செலவில் அருள்நிறைத் திருப்பணிகளையும் செய்த அறநிலையத்துறையாக ஒளிவீசுகிறது.



**ஸ்ரீராம் சர்மா,**
**எழுத்தாளர் - இயக்குனர்**

இந்த ஆட்சியில் கோயில்களின் திருப்பணிகளுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு உபயதாரர்கள் சுமார் 1,550 கோடி ரூபாய் அளவுக்கு பங்களித்திருக்கின்றார்கள் என்பது திராவிட மாடலின் இந்து அறநிலையத் துறை அதன் நுண்ணிய செயல்பாடுகளின் மீது மக்கள் கொண்டிருக்கும் மாறாத நம்பிக்கையினையே காட்டுகிறது.

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள.**

அதிகாரம் 53 - சுற்றந்தழால் : குறள் 527

உலகையே உலுக்கிப் போட்ட பெருந்தொற்று கொரானா. அந்தக் கொரானா பேரிடர் காலத்தில் கன்றினைக் காக்கும் தாய்ப்பசுவாய் செயல்பட்ட நமது திராவிட மாடல் அரசாங்கம் அர்ச்சகர்கள், பட்டாச்சாரிகள், பூசாரிப் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மனதில் கொண்டு அவர்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், உதவித்தொகை ரூபாய் 4,000 வழங்கியதும் - தூத்துக்குடி, திருநெல்வேலியில் 2023ல் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு 50 ஆயிரத்துக்கும் மேலான உணவுப் பொட்டலங்களை அள்ளிக்கொண்டு சேர்த்து அரவணைத்து வழங்கியதும் திராவிட மாடல் கண்ட அறநிலையத் துறைக்கோர் தங்கச் சான்றாகின்றது.

**இல்லறமல்லது நல்லறமன்று**

-ஔவை அருளிய கொன்றை வேந்தன்

தமிழ் மூதாட்டி ஔவையின் கூற்றைத் தன் நல்லாட்சிக்கான கோட்பாடாகவே கொண்ட பெருமைமிக்க இந்து அறநிலையத்துறை சார்பாக இதுகாறும் ஏறத்தாழ 3,500 தம்பதியினருக்கு பொற்றாலியும், பட்டுப்புடவையும், ரூபாய் 50,000 மதிப்புள்ள சீர்வரிசைகளும் அளிக்கப்பட்டு கோலாகலமாகத் திருமணம் நிகழ்த்தி வைக்கப்பட்டுள்ளது போற்றத்தக்கதாகிறது.

**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**

- அருட்பிரகாச வள்ளலார்

**அறநிலையத்துறையின் சார்பாக 13 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 800க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் நடைபெறுகிறது. இந்த அரும்பெரும் திட்டத்தால் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சம் பக்தர்களுக்கு மேல் பலனடைகிறார்கள்.**

**பசி வந்தால் பத்தும் பறந்து போகும். அந்தப் பத்தில் ஒன்று கல்வி என்கிறது ஔவையார் அருளிய ‘நல்வழி’. ஆம், பசித்த வயிறு காற்றடைத்திருக்கும்போது செவிக்குள் எப்படி பாடம் புகும்? என்று கருதிய நமது புகழுடைய அறநிலையத்துறையால் பழனி திருக்கோயில் சார்பாக மாணவ - மாணவியருக்கு காலை சிற்றுண்டியும் மதிய உணவும் கட்டணமின்றி அளிக்கப்பட்டு வருகிறது.**

ஆம், வடலூர் அன்பை வழிமொழிந்து வளரும் அறநிலையத் துறையினை எத்துணை போற்றினாலும் தகும். **முக்யா புருஷயாத்ரா ஹி தீர்த்தயாத்ரானுங்கதஹ** - ஸ்கந்த புராணம்

புண்ணிய ஸ்தலங்களை நோக்கிய தீர்த்த யாத்திரையானது மாசற்ற அன்பையும் மனத் தூய்மையையும் வளர்த்துக் கொள்ள வழிகோலும் என வலியுறுத்துகின்றன மதங்கள்.

அதன் வழியொற்றி மானசரோவர், முக்திநாத், காசி, இராமேஸ்வரம் அறுபடைவீடு போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு தமிழ்நாட்டின் அறநிலையத் துறையின் சார்பாக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்காண பக்தர்கள் யாத்திரையாக அழைத்துச் செல்லப்படுவது போற்றுதலுக்குரியதாகும்.

**நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்**

அதிகாரம் மருந்து : குறள் 948

தமிழ் மருத்துவ முறைகள் 4,000 ஆண்டுகள் பழைமையானவைகளாகும் என அறுதியிட்டுச் சொல்கிறார் சித்த மருத்துவ அகராதியை நமக்குத் தொகுத்தளித்த தஞ்சாவூர் சாம்பசிவம் பிள்ளையவர்கள்.

சமூகத்தை நோய்களில் இருந்து காத்தல் அரசனுக்குரிய மிக முக்கிய அறமாகும். பிணிகளற்ற சமூகத்தால் இந்த மாநிலம் மட்டுமல்ல, இந்த நாடு மட்டுமல்ல, உலகமே பலன்பெறும்.

அந்த உன்னதக் கருத்தை நடைமுறைப்படுத்தும் விதமாக தமிழ் முறை, அதன் பின் வந்த அலோபதி மற்றும் இன்னபிற மருத்துவ முறைகளையும் உள்ளடக்கியபடி ஏறத்தாழ 17 திருக்கோயில்களில் மருத்துவ மையம் அமைக்கப்பட்டிருப்பது இந்த நல்லாட்சிக்கான அருஞ்சான்று.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

அதிகாரம் 98 : குறள் 972

சாதி என்ன சாதி? சன்னதிக்குள் அன்பு ஒன்றே நீதி! எனும்படியாக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என கலைஞர் அவர்கள் வகுத்தளித்த திட்டத்தின்படி இதுகாறும் 3 பெண்கள் உட்பட 94 அர்ச்சகர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமை வாழ்த்துக்குரியது.

ஆதிதிராவிடர் - பழங்குடி மக்கள் வாழும் கிராமப்புறக் கோயில்களில் நின்று உறையும் குலதெய்வங்களுக்காக ஏறத்தாழ ரூ.100 கோடிகளுக்கும் மேலாக ஒதுக்கப்பட்டிருப்பது பக்தர்களின் உள்ளங்களை நெகிழச் செய்வதாக அமைகிறது.

**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி**

- மகாகவி பாரதியார்

ஓதுவார்கள் என்றால் அது ஆண்களாகத்தான் இருக்க வேண்டுமா? காரைக்கால் அம்மையார் வாழ்ந்த தமிழ்த்திரு மண்ணில் ஈசன் சன்னதியில் பெண்கள் நின்று ஓதிடக் கூடாதா?

கூடும் என முன்வந்த திராவிட மாடலின் அரசாங்கத்தால் 11 பெண் ஓதுவார்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 30 ஆண் ஓதுவார்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளமை வணங்குதற்குரியது.

**பூஜா நிவேதயாமி**

- யஜுர் வேதம்

இந்துமத வழக்கத்தில் ‘பூஜை’ என்பது ஒருவிதமான ஒழுக்க நெறியாகவே கொள்ளப்படுகின்றது. அது மனிதர்களுக்கும் இறை சக்திக்கும் இடையே ஊடகமாக இருந்து நேரடித் தொடர்பை ஏற்படுத்திவிடுகிறது. அந்தவிதமான பூஜை ஒரு காலமேனும் நிகழ்ந்தாக வேண்டும் என எண்ணியது அரசாங்கம்.

அதன்படி, 17,000 திருக்கோயில்களின் ஒரு கால பூஜை திட்டம் நிறைவேற்றப்பட பொதுநல நிதி அரசுமானியம் என பலமுனைகளிலிருந்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நடந்தேறிக்கொண்டுள்ளது. மேலும், 1000 கோயில்கள் சேர்க்கப்பட உள்ளன என்பது செவிக்கினிய செய்தியாகிறது.

**மக்கள் துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே !**

- மகாகவி பாரதியார்

பழைமை என்பது காலாவதியாவதல்ல. மாறாக அது நம் கலாச்சாரப் பெருமையாக ஒளிவீசி நிற்பது. பழைமை என்பதை பாரம்பரியம் என்றே கொள்ள வேண்டும். அவ்வாறாக, தமிழர்களின் பல்லாண்டுகால பாரம்பரியத்தைக் காக்க ஆயிரம் ஆண்டு பழமையான கோயில்களைச் செப்பனிட்டுப் புனரமைக்க ஏறத்தாழ ரூ.50 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டதும் ஒளிவீசும் திராவிட மாடல் ஆட்சியில் அமைந்த இந்த அறநிலையத் துறையில்தான்.

அதுபோலவே, ஆக்கிரமிப்பில் இருந்த கோயில்களுக்குச் சொந்தமான சுமார் 8,119 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஏறத்தாழ எட்டாயிரம் ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு கோயில்களின் காவலனாக அரசாங்கம் இருந்தாக வேண்டும் என்னும் விதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்**
**மனக்கோட்டம் தீர்க்கும் நூல் மாண்பு**

- நன்னூல் 24

**தமிழர்களின் அறிவுச்சொத்து ஆழங்காற்பட்டது. சொல்லுக்கடங்காதது. உலகின் முதல் நாகரீகத்துக்குச் சொந்தக்கார இனமான தமிழினம் ஏட்டில் எழுதிவைத்த ஞானக் குறிப்புகள் கொஞ்ச நஞ்சமானதல்ல.**

**அத்தனை அறிவுச்சொத்துகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தியே தீர்வதென முடிவெடுத்த போற்றுதலுக்குரிய திராவிட மாடல் அறநிலையத் துறை, ஏறத்தாழ 300 அரிய ஆன்மீக நூல்களை அழகுற மறுபதிப்பு செய்திருக்கிறது.**

**அந்த அறிவுச் சொத்து உலகார்ந்த தமிழ் மக்களைச் சென்றடையும் விதத்தில் அதனை மின் புத்தகமாகவும் வெளியிட்டு தனது கடமையைச் செம்மையுற நிகழ்த்தியுள்ளது.**

**இவ்வாறாக இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கும் இந்து அறநிலையத்துறையின் அருஞ்சாதனைகளை விரித்துக்கொண்டே செல்லலாம்.**

**மேற்கண்ட சாதனைகளை சாத்தியப்படுத்திய ‘திராவிட மாடல்’ அரசின் போற்றுதலுக்குரிய முதலமைச்சரையும் அவர்வழி காணும் இந்து அறநிலையத்துறை அமைச்சரையும் பணிந்து வாழ்த்துவது நமது கடமையாகிறது.**

நன்றி : ‘தமிழரசு’